சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 17.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **57/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா- 10 |
| சாட்சியின் பெயர் | : | முருகையன் |
| கணவர் பெயர் | : | நாராயணசாமி |
| கிராமம் | : | அனக்குடி |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | தனித்துனை ஆட்சியர் (ஓய்வு) |
| வயது | : | 68 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4, 6-ம் எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி வேறு ஒரு வழக்கில் சிறையில் உள்ள காரணத்தினால் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது தனித்துனை ஆட்சியராக பணிபுரந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2011-ம் ஆண்டு நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்பு பணியில் இருந்த போது நன்னிலம் உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் வேண்டுகோளின்படி கடுவங்குடியை சேர்ந்த அன்பழகன் மகன் 6-ம் எதிரி அப்பு என்கிற கார்த்திக், சிறுபுலியூர் கிராமத்தை சேர்ந்த மாசிலாமணி மகன் 7-ம் எதிரி ராஜா என்கிற இளஞ்செழியன் மற்றும் கடுவங்குடியைச் சேர்ந்த தங்கவேல் மகனான இவ்வழக்கு சம்பவத்தின் போது இறந்துபோன சாமிநாதன் ஆகியோர்கள் இந்து பறையன் என சாதியைச் சேர்ந்தவர்கள் என சான்றிதழ்கள் வழங்கினேன். 6, 7 எதிரிகள் மற்றும் இறந்துபோன சாமிநாதன் ஆகியோர்களின் சாதிச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.17 18:35:22 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.